MR: M.M.M. NooRuL HAGU.


‘ எல்லாவற்றையும் உள்ளபடியறிந்த அல்லாஹுத்தஆலாவைப் போல் உனக்கு (உள்ளவிஷயத்தை) ஒருவனும் அறிவிக்கமாட்டான் ” (குர்ஆன். 35 14)

# அல்-ஹுதா

# AL-HUTHA الهدى

“ உனது மனமே உனது சிறைச்சாலை! எப்பொழுது அதை விட்டு அப்புறப்படுகின்ருயோ அப்பொழுது தான் நீ நித்தியமான சுகம் பெற்றவனுவாய் ” (ஷறஹுல் ஹிகம்)

மலர்: 3, இதழ்: 1, | பிரதம ஆசிரியர்: ● எம். எம். எம். நூறுல்ஹக் | மே - ஜுன் - ஜூலை 1986.


## வட, கிழக்கு இணைப்பு!

## தொடங்கும் மற்ருெரு பிணக்கு!!

**வட, கிழக்கு இணைப்பை கிழக்குவாழ் தமிழ் முஸ்லிம்கள் ஆதரிக்கவில்லை. இவ்விணைப்பின் மூலம் பாதிய இழப்பு நேரிடுமென முஸ்லிம்கள், அஞ்சுகின்றனர்.**

வட, கிழக்கு இணைப்பைத்தவிர வேறெதனையும் ஏற்றுக்கொள்ள முடியாதென தமிழர் அமைப்புக் கூறிவரும் இவ்வேளையில், கிழக்கு வாழ்வோர் இவ்விணைப்பை விரும்பவில்லை. தனிப்பட்ட ரீதியாகவும், இயக்கங்கள் மூலமாகவும் பலர் வட, கிழக்கு உறவைப் பற்றிப் பிரித்து வைத்துள்ளனர்.

கடந்துசென்ற காலங்களில்‘ வடக்குத் தலைமைத்துவங்களில். கிழக்கு புறக்கணிக்கப்பட்ட ஒரு பகுதியாக இருந்தது என்பதைவிட, வடக்கிலுள்ளவர்களின் ஆளுமைக்கு உட்பட்ட ஒரு பிரதேசமாகவே இருந்துள்ளது. இதனுல் சில அதிகார ‘‘ரவுடித்தனங்கள்‘‘ ஏற்பட்டதையும் மறக்கமுடியாததது. இவைகள் தூவியவிதைகள் கிழக்குவாழ் இதயங்களில் வேரூன்றி, கசர்ப்பு கனிகளை தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறது.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஒருமாகணம் கிழக்காகும். வட, கிழக்கு இணைப்பால் ஏதோ எப்படியோ ஒரு விதத்தில் பாதிக்கப்படலாமென நியாயமான முறையில் இவர்கள் சிந்திக்கின்றனர். வட, கிழக்கு இணைப்புக்கு இயலாத்தன்மையை வெளிப்படுத்துகின்றனர். முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் குறைந்துவிடுகிறது. மேலாக மதச் சுதந்திரம், கலாச்சாரம், பொருளாதார அபிவிருத்தி, உயிர்: உடமைப் பாதுகாப்பு வட, கிழக்கு இணைப்பால் பாதிக்கப்படும் எனவும் அஞ்சுகின்றனர், இதற்கு சாட்சியாக பல வரலாற்றுச் சான்றுகளையும், தற்கால (மூதூர், கிண்ணியா, உண்ணிச்சை) சம்பவங்களும் கூர்மைபடுத்தி நிற்கின்றது.

கிழக்குவாழ் தமிழர்களில்கூட பலர் வடகிழக்கு இணைப்பை ஆதரிக்கவில்லை, அரவணைக்கவில்லை என்பதை கருத்துப் பரிமாறல்கள் மூலம் நிஜப்படுத்தி வருகின்றனர். வட, கிழக்கு இணைப்பைத்தவிர சகல இன மக்களும் ஏற்புடையதாக, ஏற்றுக்கொள்ளக் கூடியதாக தமிழர் இயக்கங்கள் தங்கள் பிரச்சினையை அனுகி அலசி செயல்படுவது தீர்வுக்கு முட்டுக்கட்டையில்லாமல் முடிவுரையாக அமையலாம் - அமையக்கூடும்,

சிறுபான்மையினமான தமிழ். முஸ்லிம்கள் ஓரினத்தை ஒடுக்கியோ புறக்கணித்தோ வாழ்ந்துவிடலாகாது இருவினத்தினர்களினதும் தனித்துவம் பாதிக்காதவகையில் - கருத்துப்பறிமாறலும்-செயற்பாடுகளுமிருந்துவிடுவதன் மூலமே சிறுபான்மையினமான நம்மிடையே ஒற்றுமையும், உயர்ச்சியும் தஞ்சமடையும். இக் கூட்டின் வலிமையினை இருவினங்களும் எண்ணிப்பாராது வாழ்வது கவலைக்குரியது கவனிக்கத்தக்கது.

ஒரு சிறுபான்மையினம் இன்னுமொரு சிறுபான்மையினர்களை நசுக்கி. ஒடுக்கி விடும் சிந்தனையை முன்வைப்பது பாரிய இழப்புக்களையே விளைவிக்கும். பெரும்பான்மையினர்களும் சிறுபான்மையினர்களின் நியாயமான கோரிக்கைகளை கவனத்திற்கொண்டு நிவர்த்தி செய்வதின் மூலமே இன்றைய நெருக்கடியான காலகட்டத்திலிருந்து மீட்சிபெறலாம் தவிர வட, கிழக்கு இணைப்பால் அல்லவென்று சொல்லிவைக்கலாம், சொல்லத்தகுமானவை ★ ( 001 - நூ, ஹ )

## சந்திப்பு:-

சும்மாவா! ஒருவருடத்தின் பின் சந்திக்கின்ேரும். பச்சை வைத்தியர்களின் அறுவைச் சிகிச்சைகளுக்குள் இதுவொரு சாதனைதான்- அல்-ஹுதாவின் வருகையைத்தான் குறிப்பிடுகின்ேரும். இனிமேல்தொடர்ந்து வரும் என்ற உறுதியையும் இங்கு சமர்ப்பிக்கின்ேரும்-

இன்று இஸ்லாத்தை பங்குபோட்டுச் சிலர் சில்லறைத்தனத்தால் கலகலத்துக் கொண்டிருக்கின்றனர் அந்தக் கலகலப்பு வெறும் சலசலப்புத்தான் என்பதை உணர்த்துவது அல்-ஹுதாவின் பங்களிப்புகளின் ஒரு வகை. மற்றும் சமூதாயக் காட்டைத் துப்பரவு செய்வது எமது அடுத்த கடமையின் ஒரு வாசல் இதற்கு உங்களின் (வாசகர்களின்) ஒத்துழைப்பு மிகமிக வேண்டியதொன்ருகும். உங்கள் பகுதிகளில் இடம் பெறும் அரசியல் ஓதுக்கல், மார்க்கப்பிரச்சினைகள் சமூதாய சீர்கேடுகளை எமக்கு எந்த வடிவத்தில் எழுதியனுப்பினுலும் பிரசுரிக்க சித்தமாகவுள்ளோம். அடுத்த அல்-ஹுதா உங்கள் ஆக்கத்தோடு உங்களோடு சங்கமிக்க ஆசைப்படுகிேரும்- - (ஆ - ர்)




இப்பத்திரிகையில் இடம்பெறும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாவார்.

## ஆசிரியரின் அகத்திலிருந்து

# ஐக்கியம் நமக்கு முக்கியம்

நாம் முஸ்லிம்கள் நமக்கென்றிருக்கும் விசுவாச வாழ்வை எந்தச் சந்தர்ப்பத்திலும் மறந்துவிடலாகாது நமது வாழ்வை நெறிப்படுத்தும் புனித இஸ்லாத்தின போதனைகள் யாவும் அறிவு பூர்வமானதும் சாந்தி, சமாதானம், போன்ற உயர் பக்குவம் கொண்டதாகவுமிருக்கின்றது. இப்பக்கம்தவிர்ந்து நம் மனம் சொல்வதே மார்க்கமென்னும் அளவில் வாழத்துணிந்துவிட்டோம். இதனால் துன்பமும் அச்சுறுத்தலும் நம்மைத் தொடர்ந்து வரத் தொடங்கிவிட்டது.

நமது நாட்டில் வாழும் பலவின மக்களுள் நாமும் ஓரினம். நாம் இனப்பாகுபாட்டையோ. மதப்பிரிவினையையோ, ஊர் வேற்றுமைகளையோ ஆதரிக்க முடியாது: நமது அறவொழ்வின் வழிகாட்டிகள் வன்மையாக இதனைக்கண்டிக்கிறது. எனவே நாம் பிற சமூக மக்களுடன் பரஸ்பர உறவு பூண்டு வாழ வேண்டும், எதுவரை என்றால் நம்மை அவர்களின் சமயத்தின்பால் அழைக்காதவரை.

நம்மை நசித்துவிடத்துணியும் யாருக்கும் நாம் பயந்துவிடக் கூடாது. அதே நேரம் ஓரினம் அழிந்துவிடுவதற்கு துணை நின்றவர்கள் என்றளவிலும் நாம் ஏழ்ந்துவிடக் கூடாது நமது தனித்துவத்தை பாதுகாக்க எவ்வளவிற்கு சிரத்தை கொள்வோமோ, அதையளவு பிறர்களின் தனித்துவத்திலும் நாம் கைவைத்துவிடாது பாதுகாக்கவேண்டும், ''ஜிஹாத்'' என்ற பெயரைச் சொல்லியே ஜிஹாத்தின் உண்மைத்தத்துவம் புறக்கணிக்கப்படுவதை குறிப்பாக கிழக்கில் அவதானிக்க முடிகிறது.

நாம் நசுக்கப்படுகிறோம் என்பதை மறுத்துவிடுவதற்கில்லை குறிப்பாக வட, கிழக்கில் வாழும் நம்மவர்களின் பொருளாதார நிலை மிக மந்தமான நிலையிலுள்ளன - வாழ்வை ஓட்டிச் செல்வதற்கு பொருளாதாரம் முக்கிய பங்கெடுக்கிறது. அதுவே முடங்கிவிட்டால் அம்மக்களின் நிலை என்ன? விவசாயம் தொட்டு கூலித்தொழில் வரை பலர் செய்யமுடியாது வாழும் கஷ்டத்தை என்னவென்று சொல்வது? நிம்மதியாய் பயணம் செய்துவிட முடியாதளவில் அச்சுறுத்தல்கள் முஸ்லிம்களை நோக்கி வலை விரிக்கப்பட்டுள்ளன. இது இப்படியிருக்க, பிற சமூகத்தினரும், நம்மவர்களில் விரல் விட்டெண்ணக்கூடியவர்களும் ''முஸ்லிம்கள் இந் நாட்டில் எந்தவிதமான பிரச்சினைகளும் இன்றி வாழ்கின்றனர்.'' என்று விமர்சிக்கத் தொடங்கிவிட்டது நம் துரதிர்ஷ்டமே.

நாம் வெறும் பெட்டிப்பாம்புகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்னும் கசப்பான உண்மை பலருக்கு புரியாதிருக்கின்றன. இன்னுமின்னும் இப்படியே நாமிருந்துவிடுவோமானால் நமது வாழ்விற்கு நாமே குழிதோண்டியதாகிவிடும். எனவே எம்மை எதிர்கொள்ளும் எந்தப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்துக்கொள்ளும் துணிவையும் திறனையும் நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். பிறர்களின் கை நமக்கு நிலையானதல்ல. நம் கையே நமக்கு நிலையானது. நமது வாழ்வு அல்லாஹ்வின் கையிலுள்ளது. அப்படியானால் அவனையஞ்சி, அவனருள் பெறும் பாதையில் நாம்வாழ முற்படுகின்றபோது எம்மை எந்தப்பிரச்சினையும் அணுகி எதுவும் செய்துவிட முடியாது,

● பிரதம ஆசிரியர்.

# பொய்க்காத நேசம்!

★ மேமன் கவி

சூரியனால் காயப்பட்ட சரீரம்
உண்டா! இல்லவே இல்லை!
நேசத்தால் ஊனப்பட்ட இதயம்
உண்டா? இல்லவே இல்லை!
ஒளியைப் போல்
தவிர்க்க முடியாதது சோகம்!

விசுவாசத்தை எங்கும்
விதைக்கலாம்!
அறுவடை பரிசாக
ஏமாற்றங்கள் விளைந்தாலென்ன?
பரவாயில்லை!

வாழ்வு தோட்டியில்
சில அனுபவ குப்பைகள்
விழலாம் - நம்
நம்பிக்கைகள் விழவே வேண்டாம்!

நேச விண்ணப்பங்கள் எங்கும்
ஏற்றுக் கொள்ளத்தான்
அனுப்பப்படுகி றன

நிராகரித்தல்!
தற்காலிக அறியாமையே!
நிரந்தர மௌனம்
கானல் நீர்தான்!

கரு மேகம் சூழ்
வானத்தில் கூட பிரகாசம்
ரகசியமாகத்தான் இருக்கிறது
இருள் இருக்கும் வரை!

என்றும் நிர்வாணமாய்
இருக்கும் இதயம்தான்
நாளைய சாவு வரைவரும்
ஞாபகப்பூ!

அன்றுதான்! விசுவாசத்திற்கான
விண்ணப்பங்கள்
பொய்க்கவில்லை எனும் உண்மை
வெளிச்சத்திற்கு வரும்!

★ ★

# எப்படியும் வாழலாமா?

★ யோனகபுர, நஸீஹா - முஹம்மட்

மனிதன் பிறக்கின்றான், வளர்கின்றான் ஈற்றில் அப்படியே மரணித்தும் விடுகின்றான் இந்தப் பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட ஒரு சந்தர்ப்ப நிலையைத்தான் நாம் வாழ்க்கை என்கிறோம். அது ஒவ்வொரு ஜீவனுக்கும் இன்பமளிக்க வேண்டும். பூரணத்துவமாக கட்டுக்கோப்பாக அமையவேண்டும். என்றெல்லாம் விரும்புகின்றோம். ஏன்! அதைத்தான் இஸ்லாம் காட்டிக்கொண்டிருக்கின்றது. அதையேதான் இஸ்லாம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறது.

எமது அருமை கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் முன்மாதிரியாகவும் எமக்குக் காட்டிச் சென்றுள்ளார்கள். ஆனால் இன்றைய நவயுகத்தில் வாழும் மனிதனோ புதுயுகம் புதுமை என்று கூறிக்கொண்டு இப்படியும் வாழலாம். எப்படியும் வாழலாம் என வரையறுத்துத் தனது விருப்பத்தின்படி வாழத்துடிக்கிறான் வாழ்ந்தும் வருகின்றான்.

எந்தமனிதனை பல நூற்றாண்டுகளுக்கு முன் பொறுமை நபி (ஸல்) அவர்கள் சீர்திருத்தினார்களோ, அதே மனிதன் மீண்டும் தற்பொழுது புதுயுகம் என்ற பெயரில் மௌட்டீகத்தில் வாழ்கிறான் என்றால் இதைவிட வேதனையும் வெட்கத்தையும் தரக்கூடிய விடயம் வேறு உண்டோ?

நாகரீக மேகத்தால் ஆடம்பரமாய் வாழத்துடிக்கும் ஒரு சில மனிதன் மது, மாது, சூது, பின் கொலை போன்றவற்றைச் சாதாரணமாகச் செய்யும் பொழுது அன்றைய ஒழுக்கமற்ற நாகரீகமற்ற மனிதனுக்கும் இன்றைய அறிவுலகத்தில் வாழ்ந்து அணுவணுவாக இயற்கையையும் இறை படைப்பையும் பற்றிச் சதா சிந்திக்கும் மனிதனுக்கும் இடையில் வித்தியாசம் புரியவேயில்லை.

நாயகம் (ஸல்) அவர்கள் எமக்குக் காட்டிச் சென்ற வழிமுறை வாழ்க்கைமுறை பண்பாடு இதுபற்றி நாம் ஒவ்வொருவரும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். இல்லாத பட்சத்தில் நிச்சயம் மறுஉலகில் இறைவனின் சமுகத்தில் கைசேதப்பட்டவர்களாக நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிடும். எனவேதான் இஸ்லாம் எப்படியும் வாழமுடியாது. இப்படித்தான் வாழவேண்டும் என்று வரையறை செய்துள்ளது. ஏனெனில் நாம் பிறந்து வளர்ந்து மடிந்து விட்டால் மட்டும் எமது வாழ்க்கை முற்றுப் பெறவில்லை மறு உலகிலும் வாழவேண்டும். ஏனென்றால் அங்கு நலமாக வாழ இவ்வுலகில் நாம் அதற்கு நன்மைகள் புரிய வேண்டும், எனவேதான் இது பற்றி நபி (ஸல்) கூறும்போது

"இம்மையானது (இவ்வுலகம்) மறுமைக்குப் பின் பயிர் செய்யக் கூடிய ஒரு (நன்மைகளை அறுவடை செய்யக் கூடிய) தளமாக உள்ளது."

எனவே இவ்வுலகில் உயிர்பெற்ற எந்த ஒரு ஜீவனும் மரணித்தே ஆக வேண்டும். மறுமையைச் சந்தித்தே தீரவேண்டும். அங்கு இறைவனின் சன்னிதானத்தில் பிரசன்னமாக வேண்டும். செய்த பாவங்களுக்கு உரிய தண்டனைகளை அனுபவித்தாக வேண்டும். எனும் தத்துவத்தைச் சிந்தனையுள்ள ஒவ்வொரு ஜீவனும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். அப்பொழுதுதான் அதன் தாற்பரியம் புரியும் தவிர கண்டதே காட்சியாக வாழத் தலைப்பட்டோமென்றால் எமது நிலைமை பரிதாபமாகிவிடும்.

ஆகவே அப்பயங்கர நிலை எமக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே இறைவன் எமக்கு சீரான சிந்தனையை விஷேடமாக அளித்துள்ளான் அதன்படி இஸ்லாம் காட்டும் வாழ்க்கைச் சட்டத்தின்படி ஏன் இஸ்லாமே ஒரு பூரண வாழ்க்கைத் திட்டமாக இருப்பதனால் அது கூறும் விளக்கமே போதும் நாம் சுபனத்தை அனுபவிப்பதற்கு என்ற உண்மையை துலாம்பரமாகப் புலப்படுத்துகின்றது. ●

## வெளிச்சமாகும் வேஷங்கள்...!

சமூகச் சாக்கடைக்குள்
புழுவாகத் துடிதுடித்து
புண்மைகளையே விழுங்கும்
''புத்தி ஜீவிகளி'' ன்
புதிய ஊர்வலங்கள்....

ஆளுயரப் புகழ் சூடி
மாலையிட்டு-
மணமுமிட்டு-
மானம் காக்கும்
கௌரவக் காளான்கள்!

தூசி மண்டலப்
போர்வையாய்
உள்ளே-
ஓராயிரம் அழுக்குகளை
அடக்கம் செய்து
ஆண்மை வீரியம்
பேசுகின்ற-
மழுங்கிய ஊசிகள்!

ஊர்வலங்களுக்குள்
ஒழிந்திருந்து-
ஊரை வலம் நோக்கும்
'' ஒரு ஜாதிப் ''
பேர் வழி முகங்கள்!

நேர்மையையும்-
நிழல்களின் உருவையும்
மறைத்து விட்டு
நேரடி இருளில்
நாடகமாடும்
பகல் வேஷ-
படு ''ஹீரோக்கள்''!

★ கலைமகள் ஹிதாயா மஜீத்

## கவனத்திற்கு

அல்-ஹுதா பிரதி தேவையானோர் 2.50 சதம் அன்பளிப்பாக அனுப்பிப் பெற்றுக்கொள்க. தபாற் கட்டளைகள், காசுக்கட்டளைகள் அனுப்பும்போது பெறுபவரின் பெயருக்கு நேரே *A. M. M. NAZEER* எனவும், பணம் பெறும் தபாற்கந்தோராக *Post Office Sainthamaruthu* என எழுதவும்.

உங்கள் எல்லாத் தொடர்புகளுக்கும்:

*THE EDITOR*
**AL - HUTHA**
*129, Osman Road,*
**Sainthamaruthu - 01.**

# இஸ்லாத்தில் சீதனம்...?

● "ஹுனுப்பிட்டிச் செல்வி"

பூவையர்களுக்கோர் புது வாழ்வை தேடிப்பிடிப்பது எப்படி? என்ற வினாவிற்கு விடைகாண முடியாதுள்ளன. அனைவரும் அவ்விடையையே போர்வையாகப் போற்றி மறைந்திருப்பதுதான். சீதனத்தின் சீற்றத்தால் சிம்மாசனம் நமக்கு எட்டாக்கனியென எண்ணி, ஏக்கப் பெருமூச்சுகளை விட்டவண்ணம் வெளி நாட்டிற்குப் பறந்துவிடும் பாவையர் கூட்டம் கண்டு நம்மிதயங்கள் அழுகின்றன.

சீதனமெனும் அரக்கனின் ஆதிக்கம் பரம்பரை ஆட்சிபோல் நம்மிடையே இருந்துவருகின்றது, இதனை ஒழிப்பதற்குச் சிலர் துணிந்து விட்டபோதிலும் உரிய பயன் எட்டாதிருக்கின்றது. யதார்த்தமாகப் பார்த்தால் சீதனத்துக்கு விடிவு வெளிநாட்டுப் பயணத்தால் ஏற்பட்டு விடாது.

தன்னுடைய மகனுக்கு பெண்பார்க்க தாய் போனால், அந்தப் பெண்ணிடம் பார்ப்பது ஒழுக்கம், நற்பண்பு, அடக்கம், அறிவு, இபதாத் அல்ல மாறாக அவளுக்கென்று, வீடு, காணி, ஆபரணங்கள், பணம் எவ்வளவு உண்டு என்பதுதான், கருணையின் வடிவமான தாய்க்குலம் இப்படியாகிவிட்டது நம்மினத்திற்கே நாம் தேடிக்கொள்ளும் இகழ்வே.

நமது புனித இஸ்லாம் கூறுவதெல்லாம் ஒரு மணமகன் மணமகளுக்கு மஹர் கொடுத்து துணைவியர்களை கைப்பற்றும்படிதான் - இருப்பதற்கு இடமும், வாழ்வை ஓட்டிச் செல்வதற்கு போதிய வருமானமும் உள்ள ஒருவன் தான் திருமணம் செய்யத்தகுதியுடையவன் என இஸ்லாம் திடமாக வலியுறுத்துகிறது. இஸ்லாம் சொல்லலில்லை சீதனம் வாங்கி பெண்ணிற்கு அடிமையாகிவிட மனைவியின் முன் தலைநிமிர்ந்து நிற்க்கவேண்டிய நமது பல சகோதரர்கள் கைகட்டி நிற்கும் காட்சி வேதனைக்குரியது.

எம்மவர்களிடம் ஒற்றுமை கயிறு இல்லை. இக்கயிறு நம்மிடமிருந்து எப்போதோ அறுந்து மறைந்துவிட்டது. இல்லையென்றால் இக்கொடிய சக்தி எப்போதே எம் சமூகத்தை விட்டுப் போயிருக்கும் அல்லவா? ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' என்ற முதுமொழிக்கொப்ப பெண் பிள்ளைகளைப் பெற்றவர்களும் ஆண் மக்களைப் பெற்றவர்களும் ஒன்றிணைந்து கடமையைச் சரியாக செய்ய முன்வருவார்களாயின் மங்கையர்வாழ்வில் மணக்கோலம் பஞ்சமாக இல்லாது பஞ்சணையாகி விடும்.

அழகிற்காக (மட்டும்) பெண்களை மணமுடிக்காதீர்கள். அந்த அழகே அவர்களை விபத்திலாக்கவும் கூடும் பொருளுக்காக (மட்டும்) பெண்களை மணமுடிக்காதீர்கள், அப்பொருளே ஒருக்கால் அவர்களை பாவமான காரியங்களில் ஈடுபடச் செய்யலாம். எனவே, மார்க்கப் பேணுதலுள்ள பெண்களையே மணமுடியுங்கள். காது துண்டிக்கப்பட்டு பங்கறையான மார்க்கப் பக்தியுள்ள ஒரு பெண் மேற்கூறப்பட்ட இருவகைப் பெண்களைவிட மிக விசேஷமாவாள். (இப்னுமாஜா) ★

# பாங்கிக்கொரு பதில் மடல்

● ஆயிஷா வாஹிட்

அன்பு ரெஸானா,

அஸ்ஸலாமு அலைக்கும்,

உனது மடல் கிடைக்கப்பெற்றேன். நன்றி ஆனால் அது சுமந்துவந்த கருத்துச் சிதறல் கண்டு சிரிப்பதா அழுவதா என்றே புரியவில்லை. நீ நேர்வழியைவிட்டு வெகுதூரம் விலகிச் சென்றுகொண்டிருக்கின்றாய் என்பதை உன் மடல் அழகாகப் படம் பிடித்துக் காட்டியது. ரெஸானா ஐரோப்பிய மறுமலர்ச்சி பற்றி நீ பாடசாலையில் படித்திருப்பாய் தானே, மறுமலர்சிச்க்குப்பின் ஐரோப்பிய நாடுகளிலே செல்வம் கொழித்தது. கூடவே எல்லாவித அனாச்சாரங்களும் ஆட்கொள்ளத் தொடங்கின. பெண்களுக்கு வழங்கப்பட்ட அளவுமீறிய சுதந்திரம் எப்படியும் வாழலாம் என்ற போக்கை அவர்களுள்ளே ஏற்படுத்தியது. அதே நிலையை இன்றைய எமது சகோதரிகளும் எட்டிப்பிடித்து விட்டனர் என்பதற்கு ஓர் உதாரணமாக நீயும் மாறிவிட்டாயே!

நீ படிக்கும் பாடசாலையில் பர்தா உடை அமுலுக்கு வரவிருப்பதால் வேறு பாடசாலை மாறப்போவதாக எழுதியிருந்தாய், நீ முஸ்லிம் உன்மார்க்கம் இஸ்லாம் ஆனால் அருள் மறையின் போதனையை அறியாமல் இருக்கின்றாயே! ''நபியே! நீர் உம்முடைய மனைவிகளுக்கும், பெண் மக்களுக்கும், விசுவாசிகளின் பெண்களுக்கும் தங்கள் தலை முந்தானைகளைத் தங்கள் முகங்களிலிருந்து கொஞ்சம் இறக்கிக் கொள்ளும்படி கூறுவீராக! அதனால் அவர்கள் கண்ணியமானவர்கள் என அறியப்பட்டு, எவருடைய துன்பத்திற்கும் அவர்கள் உள்ளாகாதிருப்பதற்கு இது மிகவும் சுலபமான வழியாகும்'' *(33;59)*. என்று அழகுற கூறுகிறது குர்ஆன் எனவே தான் ரெஸானா உனக்குக் கிடைக்கும் அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிடாதே. நீ ஒரு கட்டாய கடமையை செய்வதிலிருந்தும் விலகி ஓடாதே!

உனது எல்லா பாடங்களுக்கும் இலவச பாடநூல்கள் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி. அவற்றிக்கு அட்டையிட்டு ஒட்டிக் கொள்வதற்காக நடிக - நடிகையரின் படங்கள் சில அனுப்பச் சொல்லியிருந்தாய் மன்னித்துவிடு அப்படியான ஒன்றுமே என்னிடமில்லை. ரெஸானா, உன் நடையுடை பாவனைகள் உன் பெற்றோருக்கே இழுக்கைத்தேடி தரும் உன் புத்தகங்களைப் பார்க்கும் பிறர் உன் வீட்டின் பின்னணியைப் படம் பிடித்துவிடுவார்கள். மறுகணம் இது யார் பெற்ற பிள்ளையோ என பெற்றோரைத் திட்டுவார்கள். பெற்றுவளர்த்த பாசத்துக்காக நீ பெற்றோருக்குக் கொடுக்கும் பரிசு இவ்வளவு தானா?

எதிர்வரும் திங்கட்கிழமை நிகழவிருக்கும் உனது பேர்த்டே பார்ட்டிக்கு அழைப்பு விடுத்தமைக்கு நன்றிகள். புது உடை தரித்து பலவித சிற்றுண்டிகள் தயாரித்து உறவினர் நண்பர்களுடன் ஒருபொழுதை இனிமையாகக் களிக்கப் போகிறாய், ஆனால் உன்னை இவ்வுலகிற் படைத்த நாயனை நினைக்க ஒரு நிமிடத்தை உன்னால் ஒதுக்க முடியவில்லையே ஒருவேளை அடுத்த வருடம் இப்படி ஆடம்பரமாக பிறந்த நாளைக் கொண்டாடி மகிழும் வாய்ப்பு கிடைக்காமலே போகலாமல்லவா? ரெஸானா இன்றைய பொழுதை மட்

(5ம் பக்கம் பார்க்கவும்)

# நாமும் நமது சமூகமும்!

● எம். எல். எம். அன்ஸார் -

உலகத்திலே மனிதர்கள் என்ற புனிதமான நாமத்தைப் பெற்று நாம் ஜனனிக்கின்றோம், அப்படிப் புனிதமான ஓர் அந்தஸ்தைப் பெற்று நாம் அதன் கௌரவத்தைக் காப்பாற்றி வருகின்றோமா? இல்லை என்ற பதில் ஒரு வினாடிக்குள் கிடைத்துவிடும்,

பிறக்கின்றோம் எப்படி? இந்து சமூகம் - பௌத்த சமூகம் - இஸ்லாமிய சமூகம். இப்படித் தனக்கென ஒவ்வொரு சமூகத்தைச் சாற்றிக் கொள்கின்றோம். ஆனால் - அவற்றை நாம் மதிக்கின்றோமில்லை. ஒரு சமூகத்தைச் சேர்ந்த நாம் இன்னொரு சமூகத்தை இழிவு படுத்தியும் - அதை அழித்து நாசப்படுத்திக் கொண்டும் இருக்கின்றோம். இதே சமயம் ஒன்றை நாம் மறந்துவிடுகின்றோம். ஒவ்வொரு சமூகத்தில் பிறந்தோம் தான். ஆனால் எல்லோரும் மனித சமூகம்தான் என்பதை.

ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறு சமூகங்களில் பிறந்து அதன்படி வாழ்வது இயற்கை என்றால் - மனித சமூகம் என்ற ஒரே கொடியின்கீழ்ப் பிறந்து அதனைப் பாதுகாத்து அதற்கேற்ப வாழக்கூடாதா! நான் அந்த சமூகம் - நான் பிறந்த சமயம் - நான் வேறு இனத்தவன், இப்படியெல்லாம் பாகுபாடு நோக்கி வருவதனால்தான் இன்று அகிலமெங்கும் சமாதானம் செத்துப் பிணமாகக் காணப்படுகிறது, இரத்த ஆறு பெருக்கெடுக்கிறது. சமத்துவம் கசக்கி மிதிக்கப்படுகிறது.

மனிதனாகப் பிறந்துவிட்டோம் தவிர - வேறு சமூகம் என்றால் அதில் மிருகமாகப் பிறக்கவில்லை. மனிதனாகப் பிறந்தால் மனிதப் பண்புகளைப் பாதுகாத்து - முழு மனிதனாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும். அதற்கு ஓர் ஆதாரம்தான் எம் மனதில் "நாம் மனித சமூகம்" என்ற தத்துவம் நிலைபெறுவது. ஒரு மனிதனில் நான் மனித சமூகத்தில் பிறந்தவன் என்ற அடிப்படைத் தத்துவம் நிலைபெற்றுவிட்டால் - அவன் ஒரு பூரண மனிதத் தன்மையுடையவனாகவே கருதப்படுவான். மாறாக - மனித சமூகம் என்பதை விட்டுவிட்டு, சமய - இன சமூகங்களை நோக்கி நோக்கித் தான் இன்று அழிவுகள் ஆரோக்கியம் பெற்றுள்ளன.

எனவே தான் - நாமெல்லோரும் மனிதர்கள் என்று வாயால் மொழிவது மட்டும் பெரிதல்ல. அதைச் செயலிலும் உணர்த்திக் காட்டவேண்டும். அப்போதுதான், அது எம்மை முழு மனிதனாக்கி - உலகத்தில் மற்றவர்களையும் வழி நடத்த வழி வகுக்கும். மனிதனாகப் பிறந்தவர்கள் மனித சமூகம்தான் தவிர இன - மத - குல சமூகம் அல்ல. மனித சமூகம் என்ற ஒற்றுமை நிலை பெற்றால் அகிலத்தில் அமைதிக்கு ஒருபோதும் பஞ்சம் வராது. ★

பாங்கிக்...... (4ம் பக்கத்தொடர்)

டும் நினைத்து மகிழாதே. நாளைய உன் நிலையையும் நினைத்துப் பார்.

நாம் இருவர் திருந்தினால் நிச்சயம் இன்னுமிருவரைத் திருத்தலாம். முடிவில் சமுதாயம் தானாகவே திருந்திவிடுமல்லவா? ஆனால் நாம் ஒவ்வொருவரும் வழிதவறினால் முழுச் சமுதாயமும் சீரழிந்துவிடுமல்லவா? உன் அறிவுக் கண்களைத் திறந்துபார் சிந்தையில் சிந்தனைத்தெளிவு பிறக்கும். றெஸானா, இவ்வுலகவாழ்வு ஒரு முமினுக்கு நீர்க்குமிழி போன்றதே தவிர நிரந்தரமானதல்ல. நாம் வழிதவறி நடப்பது இஸ்லாத்தின் மான்புக்கும் மாநபியின் மகத்துவத்துக்கும் கூட பங்கமேற்படுத்த தவறாது.

றெஸானா, என்னில் நீ காணும் தவறுகளைக், குறைகளைக் கூறு நிச்சயம் ஏற்று திருந்தமுயல்வேன். பிறக்கும் புதுவயதிலே நீ பூரணமான இஸ்லாமிய பெண்ணாகப் பரிணமிக்கவும், உன்னுள்ளத்தில் ஈமானின் ஒளி நிறையவும் இறைவனைப் பிராத்திக்கிறேன், இன்று நீ ஒருத்தி திருந்தினால் நாளை ஒரு சமுதாயம் திருந்தும் என்பதை மறந்துவிடாதே காரணம் நீ ஒரு பெண் என்பதுதான் விடைபெறுகிறேன். ★

- வஸ்ஸலாம் -



## நிழல்

பருவ கால மாற்றத்தில்
உக்கிரக் கோடையின் பிர
-வேசம்...!
சூரியத் தேவனின்
அக்கினிப் பார்வையிலே
வெம்பினாலும்......
ஆங்காங்கே...
பச்சை மரக்குடைகளின்கீழ்
நிழலைக் கண்ட
உடலுக்கு,
தென்றலின் பிரவேசம்...!
வியர்வைக் குளத்தில்
நீந்தினாலும்
பச்சை மரக்குடைகள்
தந்த குளுமை
மனிதனுக்கு
அடைக்கலம்

★ பாலையூற்று அஷ்ரபா

★ ★

## பிரிவு

அன்பே!
இளமை கூட்டில்
உன்னோடு
நிற்க வேண்டும் என
நிர்ப்பந்தித்தப் போது
நேற்றுகளிலும்நாளைகளிலும்
கற்பனையெல்லாம் வென்ற
மௌன மொழியில்
உன்னோடு பேசியவை
பின்னொரு நாள்
கண்ணீரில் அவிகிறது.

★ மெஹருன் நிஸா றிஸாட்

★ ★

❋❋❋❋❋❋❋❋❋❋

## 86-05-21

தார் வீதியின் தலையெழு
-த்தை
மனிதவுடல்கள் மாற்றியி
-ருந்தன
நகரத்து சுதந்திர
ரவைகளின் நெரிச்சல்கள்
ஜுலையின் தீச் ஜுவாலை
நினைவுபடுத்திய போர்வீரர்
புகை மண்டலம் -கள்
சூரிய தேவதைக்கு
அழைப்பு விடுத்திருந்தது
தலையில் கையைவைக்கும்
சமாதான நிவாரணங்கள்
நாளைய
ஜீவன்களை விலை பேசும்
தெருவின்விசாரணைகளோடு
உறவின் பிராத்தனைகளையும்
நிறுத்திவிட்ட இருதயங்கள்
பள்ளி வாசலுக்குள்
ஆண்டவனைத் தேடும்-
இன்றைய
வரலாற்றுப் பேனா.........

★ எம். முஹமட் நகீபு

## வினா

ஓ.........
நரக நெருப்பு
கற்றறிந்த
உலமாக்களாலும்
மூடப்படுமாம்
ஆமாம்
உங்களின்
வாழ்க்கையிலிருந்தே
இறைகூற்று
இங்கே
நிரூபணமாகிறது
அப்படியானால்
உங்களை நம்பி
எங்களின் வாழ்க்கையை
ஆக்கிக் கொள்வதா?
அல்ல
அழித்துக் கொள்வதா?

பதியதளாவ,
★ கே. எம். பாறூக்

★★

## மனங்கள் மாறியபோது...

சுபஹுத்தொழுகையை நிறைவேற்றி விட்டு சுபைதா என்றும்போல் அவள் வீட்டு வராந்தாவில் குளிர் அவளை வாட்டுவதனால் சீலையை நன்றாக இழுத்து போர்த்திய வண்ணம் கடந்த வாழ்க்கை என்னும் வீணையில் சிந்தனையென்னும் குச்சியால் மீட்டியவண்ணம் இருந்தாள். காலம்தான் மாறுகின்றது என்றால் இல்லை காலத்துக்கேற்றவாறுமனிதன் மாறுகின்றான் என்றுதான் சொல்லவேண்டும். எது எப்படியிருந்தாலும் சுபைதா தாத்தாவின் மாமியின் வாழ்க்கைச் சக்கரம் ஏழ்மையின் நிமித்தமே சுழலுகின்றது. படைத்தவன் நாடியப்படித்தானே நடக்கும் இன்பமும் துன்பமும் மனிதவாழ்வில் சுழலும் சக்கரம்தானே......

குறிப்பு:- சிறுகதையாக வந்த நாவல் இது பக்கங்கள் இருபத்திஐந்து. (ஆ - ர்)

## சலீமா ஒன்று நினைக்க, அல்லாஹ்...

அன்புள்ள உம்மாவுக்கு,

நான் நலமாயுள்ளேன் அல்லாஹ்வின் கிருபை உங்களுக்கும் என் செல்வங்களுக்கும் உரித்தாகட்டும்.

தாங்கமுடியாத வேதனையும் சோதனையும் என்னை வாட்டும் இவ்வேளை மடல் வரைந்தாவது கொஞ்சம் தணித்துக்கொள்ளலாம் என எண்ணுகிறேன்.

எங்களுக்கு ஒன்றன்பின் ஒன்றாக வந்த துன்பங்கள் எங்களைப் படுத்திய பாடும் அதனை தள்ளி விரட்டுவதற்காக நாம்போட்ட சவால்களும் எண்ணிலடங்கா அதில் இறுதியான முயற்சியே இன்று அரபியதேசத்தில் வீட்டுப் பணிப்பெண்ணாக வேலை செய்வது. இந்த முறை எங்களது சகல துன்பங்களையும் இறைவன் நீக்கிவிட்டான். ஆனால்...ஆனால்

குறிப்பு: இதுவொரு கடிதமாக.. (ஆ - ர்)

## கண்கெட்ட பின்னே சூரிய நமஸ்காரம்

காலைக் கதிரவனின் பொற்கதிர்கள் அந்த யன்னலினூடாக அறையை வந்தடைய கட்டிலின்மீது தன்னையே மறந்தவனாக உறங்கிக் கொண்டிருந்த நிஸ்தார் அவசர அவசரமாக நித்திரையை விட்டு எழுந்து வேலைக்குப் போகவேண்டிய ஆயத்தங்களை செய்து முடித்தவனாக பற்பல எண்ணங்களை சுமந்தவண்ணம் வேலைக்குச் சென்றான் தினமும் வேலைத்தளம் அறை என்று சென்றுவந்து கொண்டிருந்த அவன் இன்று குதூகலத்துடன் காணப்பட்டான். காரணம் அவன் சவூதி வந்து இன்றோடு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது......

குறிப்பு: இவ்வளவையும் வாசித்த உங்களுக்கே கண்கெட்டிருக்கும். முழுவதையும் பிரசுரித்திருந்தால் மூளையே கெட்டிருக்கும் (ஆ - ர்)

## சிறுகதை

### துயரத்துடன்;

எம்மை வந்தடைந்த சிறுகதைகள் இவைகள்தான். இங்கு தொடக்கங்களைத் தந்துள்ளோம் இந்தப் பாதையில்தான் சிறுகதைகளின் முடிவுகளும் சென்றுகொண்டிருக்கின்றன. ஆனால் நாம் எதிர்பார்ப்பது சிறு கதைகளையே - சீதனம், வறுமை, காதல்களில் சோரம் போனவைகளல்ல; மாறாக தற்காலத்தையும், சமூக அவலங்களையும் நிஜப்படுத்தி நிற்கும் சிறுகதைகளையே. (ஆ - ர்)

## காரிருள் தேடும் நிலவு...

“ஓ.. பத்து வருடங்கள்! “மிகப்பெரிய காலச் சிறைவாசம்” ஆரிப் முணுமுணுத்துக் கொண்டே சோம்பல் முறித்தான் பின் பத்து வருட காலமாகக் காணாமலிருந்த வெளியுலகை இப்போதுதான்முழுமையாகப் பார்த்தான்.........

குறிப்பு: தலைப்பில் இருக்கும் எதிர்பார்ப்பு படைப்பில் இல்லை. (ஆ - ர்)

## விடியும் இரவுகள்

“சம்சுன்...... சம்சுன்...... ஏய் சம்சுன் என்ன பண்ணிக் கிட்டிருக்க இங்க கொஞ்சம் வந்திட்டுப் போயேன்”

“ஏன் அப்படிக் கத்திரீங்க கை கொஞ்சம் வேலையா இருந்தது அதான்......

“ஆ இதெல்லாம் கொண்டு போய் வைச்கிட்டு சூடாகக்கொஞ்சம் கோப்பி கொண்டுவா பாப்பம்”

“இருங்க கொண்டுவாரன்”

குறிப்பு- நீங்கள் வாசித்து முடித்தவைதான் தொடர்ந்தும் வலியுறுத்தப்படுகிறது. (ஆ - ர்)

## இறை தண்டனை

சரியாக பகல் 12மணி இருக்கும். சூரியன் உச்சியில் நின்று கொண்டு இருப்பதாலோ என்னவோ வியர்வைத் துளிகள் முத்து முத்தாக பஸ்மிலாவின் முகத்தில் அரும்பி இருந்தது. அவள் கிணற்றடியில் நிறைய துணிகளை துவைத்துக் கொண்டு இருந்தாள். பாவம் பஸ்மிலா அவள் திருமணம் செய்து ஒரு வருடம்கூட இன்னும் ஆகவில்லை. அதற்கிடையில் அவள் துரும்பாக இளைத்து இருந்தாள். பஸ்மிலா அந்தவீட்டில் மருமகளாக இருந்தாலும் அது பெயரளவில்......

குறிப்பு: இதுவொரு மஸலாப் படைப்பு. (ஆ - ர்)

## புனிதப் பயணம்...

நிலையிலா இவ்வுலகில்
பயணங்கள் பலவுண்டு
என்றுமேமுடிவாகாப்பயணம்
ஒன்றுண்டு அதுதான் புனிதப்
-பயணம்

இரவுக் கன்னியின் இன்பத் தாலாட்டில் நகரமே உறங்கிக் கொண்டிருந்தது. அந்த நாடகக் கொட்டகை முழுதும் மக்கள் நிரம்பி வழிந்தனர்- ‘உண்மையின் ஜனனம்’ என்ற அந்த நாடகத்தை நான் பல தடவை பார்த்திருந்தும்......

குறிப்பு: நூற்றுக்கு ஐந்துவீதம் தரமாகச் சென்றாலும் ஆரம்பம் மிகுதிப் பகுதியின் வசனங்கள் தரம்கெட்டுச் செல்கின்றன (ஆ - ர்)

# “பித்அத்” தான செயல் பின்பற்றத் தகுமா?

● எம். எம். எம். நூறுல்ஹக்

நம்மவர்களில் அநேகமானவர்கள் எமது செயல்களில் பலதைப் “பித்அத்” எனச்சொல்லி, அவைகள் பின்பற்றத் தகாதவையெனப் புறக்கணித்தும் விடுகின்றனர். இந்நிலைக்கு வந்ததற்கு முக்கிய காரணம் பித்அத்தைப்பற்றிய தெளிவான விளக்கங்கள் தெரியாதும்; பித்அத்தைப் பற்றிக்கூறும் பல ஹதீஸ்களுள் பொதுவாகக் குறிப்பிட்ட ஒரு ஹதீஸைமாத்திரம் அறிந்து கொண்டதினாலும் என கூறலாம்.

“காரியங்களில் மிகத்தீயவை புதிதாய் புகுத்தப்படுபவைகளாம்; நூதனமானவையெல்லாம் துன்மார்க்கங்களாம்.” (முஸ்லிம்) இவ்ஹதீஸ் பித்அத்தைப்பற்றிப் பொதுவாகக் கூறியதாகும். அதுவும் “தீமைபயக்கும் புதியபழக்க வழக்கங்களை மாத்திரமே” குறிப்பிடுகின்றதென ஹதீஸ் விளக்கங்களிலிருந்து நாமுணரக் கூடியதாகவுள்ளது.

பித்அத்தைப்பற்றி முழுமையாக விளங்கிக்கொள்ளாத அறைகுறைகளின் அறை கூவல்களுக்கு செவிமடுத்து நேர்வழிக்குப் புறம்பாக வாழத் துணிந்து விடுவது யாருடைய தவறு? தெளிவான விளக்கங்களிலிருந்தும், தட்டுத்தடுமாறுவது அறிவீனமான செயல் என்பதில் இரண்டாம் கருத்தில்லை. ஆனால், பித்அத் என்றால் என்னவென்று விளங்கிக்கொண்டால் குழப்பத்திற்கு இடமிராது.

“பித்அத்” என்ற அரபுச் சொல்லிற்கு “முன்மாதிரி எதுவுமில்லாது உருவாக்கப்பட்ட” தென்பது பொருளாகும். ஆனால், இஸ்லாமியப் பரிபாஷையில் பித்அத் என்பது கருணைநபி (ஸல்) அவர்களின் காலத்திற்குப்பின் (அவர்கள் செய்யாதது, சொல்லாதது) உருவாக்கப்பட்டவையாகும்” என இமாம்கள் இயம்பியுள்ளனர். எனவே, நபியுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலகட்டத்தில் இல்லாத நடைமுறைகள் யாவும் பித்அத்துத்தான். ஏன் அவர்களின் காலத்தில் இல்லாத வஸ்துக்கள்கூட பித்அத்தானதே.

பித்அத்தான செயல்கள்யாவும் தகாதவை என்ற முடிவிற்கு வந்துவிடுவோமாயின் எமது செயல்களில் எண்ணற்றவை தவிர்க்கப்பட வேண்டியவை என்ற நிலைக்குள்ளாகி விடுவோம். நாமின்று பயணம் செய்யும் பேருந்து வண்டியோ, மோட்டார் வாகனமோ பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் இல்லை. ஏன் குர்ஆனை புத்தகவடிவில் கொண்டு வந்தது ஒலிபெருக்கி மூலம் பாங்கு சொல்லல் இமாம் ஜமாஅத்தாக தருவியாஹ் தொழுதல் போன்ற (நல்ல) செயல்கள் எல்லாம் பித்அத்தானதுவே. பித்அத்து என்பதற்காகச் செய்யத்தகாதவையல்ல என்பதற்கு நிறைய ஆதாரங்களை இஸ்லாமிய அடிப்படையிலுள்ளது. அவற்றில் இரண்டு ஆதாரங்களைப் பார்ப்போம்.

“நிச்சயமாக மரணித்தவர்களை எழுப்புவோம் மேலும், அவர்கள் முற்படுத்தியவைகளையும் அவர்களின் வழிமுறைகளையும் எழுதுவோம்.” (குர்ஆன் 36: 12) இவ்வசனத்திலுள்ள “வழிமுறைகள்” எனப்பொருள் கொண்ட “வஆஸாரஹும்” என்ற அரபு வார்த்தைக்கு “அவர்கள் உருவாக்கிய நல்ல அல்லது தீய வழிமுறைகள் என்னும் விளக்கம், தப்ஸீர் காதின், ஜலாலைனில் கூறப்பட்டுள்ளது.

“யாராவது புனித இஸ்லாத்தில் ஓர் அழகிய வழிமுறையை உருவாக்கினால் (அவருக்கு) அவ்வாறு உருவாக்கிய நன்மையையும், அவருக்குப்பின் அவ்வழிமுறையை வைத்து யார் யார் செயல்படுகிறார்களோ அவர்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் போன்றளவு நன்மைகளையும் கொடுக்கப்படும். அத்துடன் அதைச் செயல் படுத்தியவர்களின் நன்மைகளிலிருந்து குறையவும் மாட்டாது. மேலும், யாராவது புனித இஸ்லாத்தில் ஒரு தீயவழிமுறையை உருவாக்கினால் (அப்படி உருவாக்கியவருக்கு) அதை உருவாக்கிய தீமையையும் அவருக்குப்பின் அவ்வழி முறையை வைத்து யார் யார் செயல்படுகிறார்களோ அவர்களுக்குக் கிடைக்கும் தீமைகளைப் போன்றளவு தீமைகளையும் கொடுக்கப்படும். அத்துடன் செயல் பட்டவர்களின் தீமைகளிலிருந்து குறையவும் மாட்டாது. (முஸ்லிம்)

மேற்காணும் திருவசனமும் ஹதீஸும் பித்அத்தான செயல்கள் எல்லாம் வழிகேடல்ல. செய்யத்தகுமான பித்அத்துகளுமுண்டு என்பதைத் தெளிவூட்டப் போதுமானதாகும். குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஃ, கியாஸ் ஆகியவைகளுக்கு முரணான முறையில் புதிதாக ஏற்படுத்தப்பட்டவைகள் “வழிகேடான பித்அத்களாகும் இந்த நான்கில் எதற்கும் முரணாகாத முறையில் புதிதாக ஏற்படுத்தப்பட்டவைகள் தீயவைகளல்ல” என நமது ஷாபிஈ இமாம் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே எல்லாப் பித்அத்துக்களும் செய்யத்தாகதவையென்று புறக்கணித்து விடாது செய்யத் தகுமானதென்று இமாம்கள் வகுத்துத் தந்திருப்பதை நாம் பின்பற்றுவோமாக. இது தவிர தவறிய கருத்துக்களுக்கு உட்பட்டுத் தட்டுத்தடுமாறாது தெளிவான - நேர்பாதையில் வாழத் திடசங்கற்பம் பூணுவோமாக ●

“ஜஹ்ரான்ஸ்”
உங்களுக்குத் தேவையான நவ நாகரிக டிசைன்களில்
★ சேட், பெல்ஸ், கோட்
★ ஜீன்ஸ், நெஷனல்சேட்
★ டிஸ்கோசேட், சோட்ஸ்
★ பெண்களுக்கான ஜக்கட், கவுன்
★ சாரிகளுக்கு பூவேலைப்பாடுகள்
ஆகியவைகளை வியக்கும் வண்ணம்
குறித்த நாள் தவறாமல் உங்கள் ஆடைகளை அழகுற தைத்துக்கொள்ள நீங்கள் வத்தளையில் நாடவேண்டிய தையல் நிலையம்
— “ஜஹ்ரான்ஸ்” —
ஜஹ்ரான்ஸ் என்றால் நம்பிகை
ஜஹ்ரான்ஸ் என்றால் அழகு
ஜஹ்ரான்ஸ் என்றால் நவநாகரிகம்
உங்கள் தொடர்புகள்:-
★ “ஜஹ்ரான்ஸ்” ★
இல: 1/7, ஸ்டேஸன் வீதி, வத்தளை.

# நினைத்துப் பார்க்கவேண்டிய சில குறிப்புகள்

● "ஹகீலா"

தேசிய வரைபடத்தில் நமது நிலையினை இரத்தத் துளிகள் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கின்றன. தனித்துவப் பாரம்பரியக் கலாச்சாரத்தைக் கட்டிக் காப்பதற்கான தலைமைத்துவமில்லாத எமது பாவப்பட்ட பிரதேசங்களை புத்தளம், காலி, ஜூலையின் தீச்ஜுவாலை ஏப்ரல் கலவரம், கிண்ணியா படுதுக்கடை, கொம்பனித்தெரு போன்ற ஈனச்செயல்கள் எம்முடன் கைகுலுக்கியதினால் தொடரும் பீதிகள் நமது ஒவ்வொரு பிரதேசங்களிலும் அகதி முகாம்களை முகாமிட்டுள்ளன. எமது அரசியல்வாதிகளை அரசியல் விலைகொடுத்து வாங்கிவிட்டன. ஆனாலும், பலசிரமங்களின் மத்தியில் எமக்கு எதையாவது சொல்லித்தொலைக்க வேண்டுமென்ற இவர்களது "நிர்வாணச் சிந்தனைகள்". எம்மை "எருமைகள்" எனப் பிறசமூகங்கள் விமர்சிக்குமளவில் அமைந்து விடுகின்றன.

அரசியல் புறக்கணிப்புக்கள் நமது உரிமை உடமைகளையும், இனவாதம் உயிர்களையும் சூறையாடிக் கொள்கின்றன. ஆனால், நமது அரசியல்வாதிகளின் மௌனம் களின் சம்மதங்களை சந்திக்கும் நமது வரலாறு வேதனைகள். எனினும் சமூகங்களின் அரசியல், மத வேறுபாடுகளற்ற அனுதாப அறிக்கைகளையும் குரல்களையும் அதிகம் தாங்கிவரும் தேசிய நாளிதழ்கள் - இதனால் கூட பலபாரிய இழப்புக்களை எமக்கேற்படுத்துகின்றன. எமது உண்மையான நிலமைகளைக் கூட இத்தகைய ரீதியில் சுட்டிக்காட்ட. முன்வராத தலைமைத்துவங்களை நம்பியே நாம் வாழவேண்டியுள்ளது. இத்தகைய நிலையினால் எமது நெருக்கடியான சூழ்நிலையினை எடுத்துக் காட்டக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாகவில்லை. இதற்காக எமது உண்மை நிலை உறங்கிவிடாது. ஆனால், பிறர்களின் பார்வையில் ஏனையோர்களின் சுட்டிக்காட்டுதலே மேலோங்கி விடுகின்றன

எமது மதத்தலைவர்கள் கூட சுவர்க்கமும், நரகமும் பற்றியே பேசிக் காலம் கடத்துகின்றனர் சமூகத்தில் காணப்படும் நெருக்கடிகள் பற்றியோ, அவற்றிற்கான நிவர்த்திகள் பற்றியோ மூச்சுவிடாது மூச்சயித்துள்ளனர் இவர்களின் சிந்தனையில்கூட இவை சிக்காதுவிட்டாலும் பிறமதத் தலைவர்கள் எவ்வாறு தனது சமூகத்தின் அவலங்களைப் பிரபல்யப்படுத்தி - ஆறுதலும் தாபரிப்பும் கூறுகின்றன ரென்பதையாவது முன்மாதிரியாகக் கொள்ளக் கூடாதா? அல்லது, முதுகெலும்பே உடைந்துவிட்ட நிலையா?

தவிர்க்க முடியாத சட்டங்கள் உருவாக்கி விட்டதாகக் கூறப்படும் ஜனநாயகத் தெருக்களில் நமது ஜனாசாக்கள். இதன் இறுதிக் கடமைகளுக்காக போராளிகள் என ஒப்பமிட்டு ஒப்புக்கொள்ளும் கையொழுத்துக்கள் தற்கால கட்டத்தில் நியாயமானதாகலாம். ஆனால், நாளையநம தலையெழுத்தையும் நாம் நிர்ணயித்துக் கொண்டதாகவும் அமையும். என்பது நாம் சிந்திக்கவேண்டிய விஷயமாகும். மேலும், பதவியை இழக்கச் செய்தவர்களிடமே பதவி பறிபோன வேதனை மனம் திறக்கப்படுகின்றன. எனினும் பதவி ஒன்றை பெற்றுக் கொடுக்காது போகும் கேள்விக் குறிகள் ஓர்புறம். இத்தகைய தலைகுனிவாக நமது அரசியல்வாதிகள் நடந்துகொள்கின்றனர். இவை அரன்மனையின் அந்தப்புறங்களில் நம்மையும் தலைகுனிய வைக்கின்றன.

தேச வெளிச்சத்தில் துரதிர்ஷ்டமான இனவாத தொற்றுநோய்கள் பரவியிருப்பது கவலைக்குரியவை. இவற்றில் நமது குருதிகளினாலும் வாய்களைக் கொப்ளித்து சுத்தப்படுத்திக் கொள்கின்றனர். மேலும்: மேற்கென்றும், வடக்கென்றும், கிழக்கென்றும் ஈற்றில் எமது தொகுதியா? கிராமமா? என்ற நமது அரசியல் பேதங்கள் கைவய விரித்துக் கொள்கின்றன. இவை தேசவெளியில் குற்றவாளிகளாக தம்மை நிறுத்திக் கொள்கின்றன. இவைகள்தான் நமது அரசியல் தலைமைத்துவங்களின் பங்களிப்புக்கள்.

பல தீச்சுவாலைகள் நமது ஜனாசாக்களை நல்லடக்கம் செய்கின்றன. இத்துரதிர்ஷ்டம் நமது ஏனைய, எதிர்கால பாரம்பரிய கலாச்சாரங்களுக்கு எச்சரிக்கை விடுகின்றன ஆனாலும் அவைபற்றிய கவலையில்லாத நிகழ்கால தலைமைத்துவங்கள் கண்ணிருக்குரியவை. எனினும், இத்தலைமைத்துவம் எதிர்காலத்தை ஏமாற்றாது என கருதும் நமது அமைதிகள்அறிவு பூர்வமற்றதாகும் இரத்தவுறவின் இணைப்பில் எழுப்பப்பட்டுள்ள இஸ்லாத்துக்கு பங்கம் களை விளைவித்துக் கொண்டிருக்கின்றன. நமது சமூகம் ஏனெனில் சமூகத்தினைப் பீடித்துள்ள ஊர், பிரதேசங் என்ற பேதமைப் புற்றுநோய்கள். இதனால் ஏற்படும் பிரச்சினைகளின் ஈனச்செயல்களை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது.

எனவே, "அக்கரைக்கு இக்கரைப் பச்சை" யாய் ஈனச் சரித்திரதிற்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நமக்கொரு தலைமைத்துவத்தை ஏற்படுத்திக் கொள்வது அவசியமானதும், அவசரமானதுமாகும். ●

# நெஞ்சத்துளிகள்......

கொள்கையால் ஒரு வித்தியாசத்தைச் சுமக்கும் பாங்கே வரவேற்கத்தக்கது முன்பக்கம் (அட்டையில்) "கிழக்கில் சில அக்கிரமங்களின் சேட்டை! பல அப்பாவிகள் வேட்டை!;" என்ற தலைப்புடன் சமகாலப் பிரச்சினையை அனுகியுள்ளார்கள். துணிவோடு இக்கருத்தை அனுகிய பாணி யாவரையும் கவருவதாயமைந்துள்ளது. ஆசிரியர் கருத்தில்கூட நல்லதொரு கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது வழிகாட்டவேண்டியவர்களேவழிதவறி உலமாக்களிடையே கருத்து முரண்பாடு தோன்றி பாமரமக்களை எவ்வாறு நெறிபிறழச் செய்கிறது என்பது இதிலிருந்து துல்லியமாய்த் தெரிகிறது. இஸ்லாம் ஒரு பரிபூரண வாழ்க்கைத் திட்டமென்பதைப் புரியாதோரின் மனோநிலைக்கு விளக்கம் அளிப்பதாய மைந்துள்ளது. 'இஸ்லாம் சரிக்கும் வாளல்ல கவின்பிறையே'என்னும் மௌலவி கல்முனை கலீல் (நூரி) அவர்களின் கட்டுரை. இக்கட்டுரையில் பொதிந்துள்ள யதார்த்தம் தெளிவை மனதில் ஊட்டுமென்பதல் ஐயமில்லை.

மனிதனுக்கு இறைவன் அறிவைக் கொடுத்தது சிந்திப்பதற்காக சிந்திப்ப சிறந்த தெளிவான நேரான முடிவு எடுக்க அந்த சிந்தனையே சிந்தையைக் குழப்பலாகா ; என்ற முடிவை சிந்தனை தெளிவற்கேயல்லாமல் குழப்பத்திற்கு அல்ல எனும் கட்டுரையை முன்வைத்துள்ளார் இப் பத்திரிகையின் ஆசிரியர் எம். எம். எ. நூருல் ஹக்.

"நம்மவர்களின் இன்றைய நிலை என்ன" என்று கேட்டிருக்கிறார் பாரிஹா, நீதியானது ஏழை, பணக்காரன் என்ற பேதம் பார்ப்பது பற்றியும் எமது இஸலாமியர்கள் பணத்தைக் கட்டிக் கொண்டு தாம் படாடோபமாக வாழ வயிற்றுக்கு வழியில்லாதவர்கள் வாடித்திரியும் அவல நிலை பற்றியும் நீறக்கவில்லை. சீதனம் என்ற பெயரில் தாம் உயர்வதாக எண்ணிக் கொண்டு தாழ்ந்து போகும் ஆடவரின் மூடத்தனத்தை யதார்த்த பூர்வமாக சித்தரித்துள்ளார்.

● செல்வி - மசூறு - ஏ. மஜீட்

குறிப்பு;- ஈராண்டு நிறைவு மலர் பற்றிய விமர்சனத்திலிருந்து... (ஆ-ர்)

# அம்பும் இலக்கும்

பதிலளிப்பவர்: ''மருதூர் மெய்யொளி''

★ அம்: நானு இறந்துவிட்டால் அவர் மனைவியைத் தம்பி திருமணம் செய்ய லாமா? இதைப்போல் தம்பி இறந்துவிட்டால் அவர் மனைவியை நானு திருமணம் செய்து கொள்ளலாமா? இவ்விரு திருமணங்களையும் இஸ் லாம் அனுமதிக்கின்றதா?

இல: இவ்விரு மணங்களையும் இஸ்லாம் அனுமதிக்கின்றது,

● மில்ஹர் முஸம்மில், சீனன் கோட்டை.

★ அம்: நான் அறிந்த வரையில் ''குர்பான்'' கொடுப்பது இரண்டுவகைதான் உழ்ஹியாவும் அகீகாவும். ஆனுல் முஸ்லிம்களில் சிலர் புகுமனையில் குடிபுகுவதற்கு முன்பும் குர்பான் கொடுக்கின்றனர் இது இஸ்லாத் தில் கூறப்பட்டதா?

இல: குறித்த பிராணியை அல்லாஹ்வின் பெயர் சொல்லி அறுத்து ஏழைகளுக்கு அல்லாஹ்வின் பெயரில் பங்கிடுவதற்கு "குர்பான்" என்பது பொதுப் பெயர் ஹஜ்ஜுடைய காலத்தில் கொடுப்பதை உழ்ஹியாவென்றும், குழந்தைக ளுக்காக கொடுப்பது அகீகா வென்றும் பெயர் பெறுகிறது, இஸ்லாமி யப் பரிபாஷையில். ஆனுல், நாம் விரும்புகின்றபோது குர்பான் கொடுக் கலாம். அது புகுமனை புகும்போதானுலும் சரியே

● எம். ஏ. எஸ். ரதிமா, யோனகபுர.

★ அம்: முஸ்லிம் பெண்கள் கூந்தலில் பூச்சூடலாமா?

இல: கூந்தலில் பூச்சூடுவது தவறல்ல, ஆனுல், சூடும்பூவோ. அதன் வாச னையோ தனக்கண்ணிய ஆண்களுக்குத் தெரியாமலிருக்கவேண்டும்.

● எச். எம். கைறுன்நிஸா, ஒட்டமாவடி,

★ அம்: மஃரிப், இஷா தொழுகைகள் இமாமுடன் சேர்ந்து தொழுவதற்கு கிடைக்காத பட்சம் அத்தொழுகைகளை தருவியாஹ்வுடன் சேர்த்து தொழுவது கூடுமா?

இல: இல்லை' மஃரிபையும் இஷாவையும் தொழுதுவிட்டுத்தான் தருவியாஹ் தொழவேண்டும்.

● முஹமட்சுபைதீன், ஹுனுப்பிட்டிய.

★ அம்: மனைவி வெளிநாட்டிலிருக்கும்போது கணவன் மௌத்தாகிவிட்டால் மனைவி ''இத்தா'' இருப்பது எப்படி?

இல: தனது கணவன் இறந்த செய்திகிட்டும் நாளிலிருந்து நாலுமாதம் பத்து நாட்கள் இத்தா அனுஷ்டிக்கவேண்டும்,

● நதாமுனுஸ், காத்தான்குடி.

★ அம்: மையித்தை அடக்கம் செய்யக்கொண்டு செல்லும்போது சில இடங் களில் ''பைத்'' ஓதியவாறு கொண்டு செல்கின்ருர்கள் சில இடங்க ளில் ''பைத்'' ஓதாமல் மௌனமாகக் கொண்டு செல்கிருர்கள் இதில் எந்த முறை சரியானது?

இல: இரண்டு முறைகளும் சரியானதே. "பைத்" ஓதுவது ஷாபி மத்ஹபில் சுன்னத், ஹனபியில் சுன்னத்தில்லை.

● எம். வை, எம். அலி. ஏ. ஏ. அமீர்அலி, கிண்ணியா 3-

குறிப்பு:- முழு முகவரியுடன் கீழ்க்கா ணும் முகவரி ஒட்டப்பட்டுவரும் கேள் விகள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப் படும். இப்பகுதியில் இஸ்லாமியக் கேள்விகள் மாத்திரமே இடம்பெறும்.

ஆசிரியர்
அல் - ஹுதா
''அம்பும் இலக்கும் பகுதி''
129, ஒஸ்மன் வீதி,
சாய்ந்தமருது - 01

## —அன்பர் அரங்கம்—

★ அ. க. முஹமட் உவைஸ்
இல: 33, ஆஸ்பத்திரிவீதி,
கொழும்பு - 01.

★ மொஹமட் சுபைதீன்
1131, ஹுனுப்பிட்டிய,
வத்தளை.

★ ஜே. சிருஜுதீன்
V. C. வீதி,
வாழைச்சேனை,

★ ஏ ஷீ. முஷீல்
அல் - அக்ஸா வீதி,
கிண்ணியா - 02,

★ இஸான் ஸம்ஸுதீன்
2, நளீம்ஹாஜியார் மாவத்தை
சீனன்கோட்டை - வேருவெல.

★ றிம்ஸான் முஹமத்
34, நளீம்ஹாஜியார் மாவத்தை
சீனன்கோட்டை - வேருவல.

★ என் எம். அலிக்கான்
439, ஏ- ஆஸ்பத்திரிவீதி,
சாய்ந்தமருது ; 02

★ எம் எம். சஹீட்
181/ஏ, மிரிப்பன்னைவீதி,
தர்ஹாநகர்.

★ பைஸல் எம். அஷ்ரஃப்
ஆயிஷா மன்ஸில்
வண்ணியார்வீதி - நிந்தவூர் - 01

★ டி. எம். பௌரூஸ்
70,1 புதிய பங்களா ஹவுஸ்,
மடவளை பஸார்

● இப்பகுதியில் தங்களின் முக வரிவெளிவர விரும்புகிறவர்கள் கீழே யுள்ள படிவத்தை பூர்த்தி செய்து 75சத முத்திரை இரண்டு இணைத்து அனுப்பிவைக்கவும். (ஆ - ர்)

**அன்பர் - அரங்கம்**

பெயர்:..................
முகவரி:..................
பொழுதுபோக்கு ..................
பிறந்த திகதி:..................
கையொப்பம்:..................

# இடறல்களில் இடறி........

● '' மைந்தன் ''

எங்கோ ஓரிடத்தில் என்பதைவிட, எங்குமே யின்று துன்பவியல் நாடகத்தில் நாம் விரும்பாமலே நடிக்கவேண்டிய நிர்ப்பந்தமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அரசாங்கம் குறிப்பிடும் பயங்கரவாதிகளுக்கு எதிராக ராணுவ நடவடிக்கை எடுக்கும்போதும் எமது சமூகத்தவர்கள் உயிர், உடமைகளை இழக்கும் அதேவேளை, பொடியன்களின் துப்பாக்கிகளுக்கும் அகப்படவேண்டியவொரு துயரத்தின் விளிம்பின்பால் நடந்து கொண்டிருக்கின்றோம்.

இந்த நிலையில் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? அதற்குப் பரிகாரம் என்ன? இவைகள் கேள்விக்குறிகளாகவே குவிந்துகிடக்கின்றன. காரணம் நமக்குள் வேற்றுமை - வேறுமையம். சமூதாய நிலவரங்களை நிலவறைக்கி அனுப்பிவிட்டு, ஊர்வேற்றுமைகளிலும், ஊரவர் நடத்தைகளிலும் ஊர்வலம் வந்துகொண்டிருக்கின்றோம்.

எமது மதம் இஸ்லாம். இதில் ஒன்றுக்குமேல் எண்ணிக்கை கிடையாது. இது நம்மவர்களின் சம்மதம் அப்படியிருக்க அதற்குள்ளும் பலமயிர் புலுங்கல்களை ஏற்படுத்தி பிரச்சினைக் கூடையை நிரப்பிக் கொண்டிருக்கின்றோம். இப்படியே - விதிப்படி என்று நாம் சென்றுகொண்டிருந்தால், காலைகள் உதயத்தைத் தராது கவலைகளையே தந்துகொண்டிருக்கும்-

பெரும்பான்மையோடு நாம் ஒற்றுமையாக வாழலாம்; '' சிறுபான்மையோடுதான் நாம் ஒற்றுமையாக வாழலாம் '' என்ற சிலரின் ஒருபக்க வாதங்கள் - சமூகத்துக்கு வாதத்தையே ஏற்படுத்தி - இனி அதிலிருந்து விவாதங்கள் - இந்த நம்பிக்கைகளை எம்மிடமிருந்து நாம் களைத்துவிடாமல், கழைந்துவிடவேண்டும். இந்த ஒருபக்க அணைப்புகள் எமக்குமட்டுமல்ல - எமது வருங்கால சந்ததியினரையும் வருத்திக் கொண்டிருக்கும். நினைக்கக் கஷ்டமானது, நினைத்துப் பார்ப்போமானால் மூதூர், கிண்ணியா, புத்தளம், புதுக்கடை, கொம்பனித்தெரு - ஒருபக்கம் எண்ணுவோரை தெருவுக்குக் கொண்டுவரும்.

ஊர்களை பாதுகாக்க ஊர்காவல் படைகளை நியமித்தது அரசாங்கம் அதில் நம்மவர்களுக்கு சில ''ஷொட் கண்'' கள் கிடைத்தது. அந்த நம்மவர் (ஊர் காவல்படை) களின் பெயர்கள் பத்திரிகைகளில் அதிகம் கதிப்பதை காணமுடிகிறது. இவர்களில் சிலரின் '' அடாவடித்தனமான '' நடவடிக்கைகளால் சமூகச் சண்டைகள் இனச் சந்தைக்கு வருவது தவிர்க்கமுடியாமலிருக்கிறது.

ஊரை காப்பாற்றப் புறப்பட்டவர்கள் ஊருக்கே ஊறுவிளைக்கும் அளவிற்கு அவர்களின் நடத்தை ஊர்ந்திருக்கிறது. தங்களுக்கு வேண்டாதவர்களை தாக்குவதும் சில ஊர்களில் கதைக்கப்படும் முன்னணிக் கதைகளாகும். இவற்றை வரிசைப்படுத்திப் பார்த்தால் நாம் நமக்கு சவக்குழிகளை தேடிக்கொண்டிருக்கின்றோம் என்பது தெளிவாகிறது.

இஸ்ரவேலியரின் வருகைக்கு ஒன்றுபட்ட நாம் (சில தலைகளைத்தவிர) லிபியாவில் அமெரிக்கா பயங்கரவாதம் செய்தபோது ஓரணியில் திரண்ட நாம் நம்நாட்டுக்குள் - நமக்குள் நடைபெற்றுக் கொண்டிருப்பவைகளில் '' பிரித்தல் '' அடையாளம் இடுவதேன்? இனி மேலாவது அந்து கூனல் குறிகளை நிமிர்த்துவார்களா? நிமிர்வார்களா?

(ந - ர் 003)

உங்களுக்குத் தேவையான
நாளாந்த வீட்டுப் பாவனைப் பொருட்களோ பல
அவைகளை ஒரே இடத்தில் நியாயமான
விலையில் பெற்றுக்கொள்ள,

— ஸமான் டிரேட் சென்டர் —
மற்றும் சகலவிதமான சமையல் பொருட்களையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

★ ஸமான் டிரேட் சென்டர் ★
அத்தோடு நாளாந்த
தினசரிகள், இந்திய சஞ்சிகைகளையும்
பெற்றுக்கொள்ள
ஸமான் டிரேட் சென்டர்
இவற்றோடு பெரியோர், சிறியோருக்கான பால்மாவகைகள், விட்டமின் டொனிக்குகளையும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டியது
சாய்ந்தமருதில் தன்னிகரற்று- எல்லோர் வாய்களும்
முணுமுணுக்கும் ஒரேயொரு ஸ்தாபனம்
★ ஸமான் டிரேட் சென்டர் ★
நம்பிக்கை, நாணயம், உபசரிப்பு, அனைத்திற்கும்
மறுபெயர்

ஸமான் டிரேட் சென்டர்
90, பிரதானவீதி - சாய்ந்தமருது - 3, டயல்: 067-2490

சாய்ந்தமருதில்

ஓர் இசைத்தடாகம்

நீச்சலடிக்க.......

பழைய, புதிய, சினிமாப் பாடல்களும், பக்திப் பாடல்களும், பல மொழிப்பாடல்களும், திரைக்கதை வசனங்கள், பிரபல மார்க்க மேதைகளின் ஹதீஸ்கள், நகைச்சுவை கதம்பங்களையும்,

ஸ்ரீயோ / மொனோ எந்த விதத்திலும்
சிறப்பாக ஒலிப்பதிவு செய்து தருபவர்கள்

★ வெஸ்டன் ரெக்கோடிங் பார் ★

அத்தோடு உங்களுக்குத் தேவையான-
★ மெக்செல், T. D. K, N P ALBA. BSAF
கசெட்டுக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்,

நீங்கள் நாடவேண்டியது:

-வெஸ்டன் ரெக்கோடிங் பார்-
கல்முனை வீதி, சாய்ந்தமருது - 02

வெளியீடு: இஸ்லாமிய இளைஞர் இலக்கிய வட்டம்
சாய்ந்தமருது - 01.

அச்சுப்பதிப்பு: மொடேண் பிரின்ரேஸ்
கல்முனை.

● தனிப்பட்ட சுற்றுக்கு மாத்திரம் ●